
01.11.2014

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை: பலத்த மழைக்கு வாய்ப்பு</u>



வங்கக் கடலில் புதிதாக குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருப்பதால், தமிழக கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர். இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தெற்கு வங்கக் கடலின் மத்தியப் பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இந்தத் தாழ்வு நிலையின் காரணமாக, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் சனிக்கிழமை பலத்த மழை பெய்யும். மேலும், இந்தத் தாழ்வு நிலை, காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுவடையவும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, மேலும் சில நாள்களுக்கு தமிழகத்தில் மழை இருக்கும். அதேவேளையில், கன்னியாகுமரி கடல் பகுதியில் ஏற்பட்ட வளி மண்டல மேலடுக்குச் சுழற்சி, லட்சத்தீவுகளுக்கு அருகில் நகர்ந்துள்ளது என்று தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சனிக்கிழமை மிதமான மழையோ, பலத்த மழையோ பெய்யும். மற்ற மாவட்டங்களில் லேசான

மழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் மழை பெய்யும். வலுவிழந்த புயல்: அரபிக் கடலில் அதி தீவிரப் புயலாக இருந்த நிலோஃபர் புயல், வலுவிழந்து காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக நிலை கொண்டுள்ளது.

**ஆவின் பால் விலை உயர்வு இன்று முதல் அமல்: நெய், வெண்ணெய் விலையும் அதிகரிப்பு**



ஆவின் பால் விலை உயர்வு சனிக்கிழமை (நவ. 1) முதல் அமலுக்கு வருகிறது. பால் உப பொருள்களான வெண்ணெய், நெய் உள்ளிட்டவற்றின் விலையும் உயர்த்தப்படுவதாக ஆவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆவின் நிறுவனத்துக்கான பசு பால், எருமைப் பால் கொள்முதல் விலையை முறையே ரூ.5, ரூ.4 உயர்த்தி, அக்டோபர் 25 ஆம் தேதி தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது. கொள்முதல் விலை உயர்வு, பதப்படுத்தும் செலவு ஆகியவற்றை ஈடுசெய்ய, ஆவின் பால் விற்பனை விலையும் லிட்டருக்கு ரூ.10 உயர்த்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இந்த விலையேற்றம் நவம்பர் 1ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இதேபோல, வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம், பால்கோவா உள்ளிட்ட பால் உப பொருள்களின் விலையும் இன்று முதல் ரூ.15 முதல் ரூ.45 வரை உயர்த்தப்படுவதாக ஆவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாதத்துக்கு கூடுதல் ரூ.300: இப்போது அட்டை மூலம் ஒரு லிட்டர் ஆவின் பால் வாங்குவோர், தற்போது செலுத்தி வரும் தொகையைக் காட்டிலும் நவம்பர் மாதம் முதல் ஒரு லிட்டருக்கு கூடுதலாக ரூ.300 செலுத்த வேண்டியிருக்கும். மேலும், அட்டை மூலம்

ஆவின் பால் வாங்குவோர், விலை உயர்வு காரணமாக நவம்பர் 16 முதல் டிசம்பர் 15 வரை அட்டை புதுப்பித்தலின்போது கூடுதலாக ரூ.150 செலுத்த வேண்டியிருக்கும். அதாவது, நவம்பர் 1 முதல் நவம்பர் 15 வரை உள்ள 15 நாள்களுக்கு விலை உயர்வு வித்தியாசத் தொகையை புதுப்பித்தலின்போது செலுத்த வேண்டும் என்று ஆவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**டீ, காபி விலையை உயர்த்த முடிவு**

ஆவின் பால் விலை உயர்வு சனிக்கிழமை முதல் அமலுக்கு வருகிறது. இதைத் தொடர்ந்து சென்னையில் ஹோட்டல், டீ கடை உரிமையாளர்கள் டீ, காபி, பால் ஆகியவற்றின் விலையை உயர்த்த முடிவு செய்துள்ளனர். இது குறித்து டீக்கடை உரிமையாளர்கள் கூறியது: டீ, காபி ஆகியவற்றைத் தயாரிக்க ஆவின்பால், தனியார் நிறுவனங்களின் பால் ஆகிய இரண்டு வகையான பாலையும் பயன்படுத்துகிறோம். இந்நிலையில் ஆவின் பால் விலை உயர்வு கடந்த சில நாள்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டு வியாழக்கிழமை முதல் அமலுக்கு வர உள்ளது. அதனால் அறிவிப்பு வந்த நாள் முதல் இதுவரை டீ, காபி, பால் ஆகியவற்றை பழைய விலையிலேயே விற்பனை செய்து வருகிறோம். ஆவின் பால் புதிய விலை அமலுக்கு வந்ததும் டீ-க்கு ரூ.2 வரையிலும், காபிக்கு ரூ.3 வரையிலும் விலையை உயர்த்த முடிவு செய்துள்ளோம். தனியார் நிறுவனங்களின் பால் விலை அதிகரித்தால் டீ, காபி, விலையை மேலும் உயர்த்துவது குறித்து அனைத்து டீக்கடை உரிமையாளர்களும் கலந்தாலோசித்து முடிவு செய்வோம் என்றனர். தற்போது சாதாரண கடைகளில் டீ ரூ.7 முதல் 10 வரையிலும், உயர்தர ஹோட்டல்களில் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்கப்படுகிறது. இதேபோல் சாதாரண கடைகளில் காபி ரூ.8 முதல் ரூ.10 வரையிலும், உயர்தர ஹோட்டல்களில் ரூ.20 முதல் ரூ.25 வரையிலும் விற்கப்படுகிறது.

விலை உயர்வு அறிவிப்பின்படி, லிட்டர் அடிப்படையில் ஆவின் பால் அட்டை விலை, சில்லறை விலை அட்டவணை விவரம் (பழைய விலை அடைப்புக்குறிக்குள்):

**விலை விலை**

1. சமன்படுத்திய பால் ரூ.34 ரூ.37

("டோன்ட் மில்க்')- (ரூ.24) (ரூ.27)

"ப்ளூ நைஸ்' 3 சதவீத கொழுப்புச் சத்து

2. "ஸ்டாண்டர்டைஸ்டு மில்க்' ரூ.39 ரூ.41

("க்ரீன் மேஜிக்')- (ரூ.29) (ரூ.31)

பச்சை நிற பாக்கெட் 4.5 சதவீத கொழுப்புச் சத்து

3. "ஃபுல் கிரீம்' ரூ.43 ரூ.45

(முழு கொழுப்புப் பால்) (ரூ.33) (ரூ.35)

ஆரஞ்சு பாக்கெட் 6 சதவீத கொழுப்புச் சத்து

4. "மெஜந்தா' ("டயட் மில்க்') ரூ.33 ரூ.34

1.5 சதவீத கொழுப்புச் சத்து (ரூ.23) (ரூ.24)

**<u>சிறுதானிய உணவுகளை அன்றாட உணவில் சேர்க்க வேண்டும்</u>**

சிறுதானிய உணவு வகைகளை அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டால் நோயின்றி வாழலாம் என்று பால்வளத் துறை அமைச்சர் பி.வி.ரமணா தெரிவித்தார். திருவள்ளூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலம், சத்துணவுத் திட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் சார்பில்

பாரம்பரிய உணவுத் திருவிழா

வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் தலைமை வகித்தார். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மாவட்டத் திட்ட அலுவலர் ஜெயஸ்ரீ வரவேற்றார். பால்வளத்துறை அமைச்சர் பி.வி.ரமணா, பிற்படுத்தப்பட்டோர்,சிறுபான்மையினர் நல அமைச்சர் எஸ். அப்துல் ரஹீம் ஆகியோர் இந்த உணவுத் திருவிழாவை தொடங்கி வைத்தனர். விழாவில் அமைச்சர் பி.வி.ரமணா பேசியதாவது:

பரபரப்பான இன்றைய வாழ்க்கையில் ஆண், பெண் இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டும். மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்ற அவசரத்தில் பாரம்பரிய உணவு வகைகளை மறந்து துரித உணவு வகைகளை உட்கொண்டு வருகின்றனர். துரித உணவுகள் உடலுக்குக் கேடானது. ஆனால் சிறுதானிய உணவுகள் மிகவும் சத்தானதாகும். இந்த சிறுதானிய உணவு வகைகளை நாள்தோறும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக கலோரி கொண்ட உணவுகளை உட்கொண்டால் அது உடலில் தேவையற்ற கொழுப்பைச் சேர்ந்து பாதிப்பை ஏற்படுத்தும்.

அதைத் தவிர்க்க சிறுதானிய உணவுகளை உட்கொண்டால் நோயின்றி ஆரோக்கியமாக வாழலாம். ஆவின் பாலுடன் சிறுதானியங்களை சேர்த்து புதிய உணவு பொருள் விரைவில் தயாரித்து விற்பனை செய்யப்படவுள்ளது என்றார் அவர். இதையடுத்து மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் பேசியதாவது: திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 2,094 அங்கான்வாடி மையங்களில் 45 ஆயிரம் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. சிறுதானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள உணவு வகைகளை தெரிந்து கொண்டு அதை சமைத்துச் சாப்பிட வேண்டும் என்றார் அவர். இதில் எம்எல்ஏக்கள் மணிமாறன், வேதாச்சலம், மாவட்ட ஊராட்சித் தலைவர் ரவிச்சந்திரன், திருவள்ளூர் நகர் மன்றத் தலைவர்

அ.பாஸ்கரன், கூட்டுறவு சங்கத் தலைவர் கந்தசாமி, ஒன்றியக் குழு தலைவர்கள் புட்லூர் ஆர். சந்திரசேகர், அம்மு மாதவன், கோட்டாச்சியர் (பொறுப்பு) வீரப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**<u>சிவகாசியில் 29 மி.மீ. மழை</u>**

சிவகாசியில் புதன்கிழமை இரவு 29 மி.மீ. மழை பெய்துள்ளது. அதே நாளில் சாத்தூரில் 32 மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூரில் 40 மி.மீ., வெம்பக்கோட்டை அணை பகுதியில் 82.2 மி.மீ., பிளவக்கல் அணைப் பகுதியில் 32 மி.மீ., கோவிலாறு அணைப் பகுதியில் 24 மி.மீ., ராஜபாளையதருமபுரி விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைச் சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி புதன்கிழமை ஆய்வு செய்தார்.

**<u>விதைப் பரிசோதனை நிலையத்தில் இணை இயக்குநர் ஆய்வு</u>**

தருமபுரி விதைப் பரிசோதனை நிலைய ஆய்வைத் தொடர்ந்து நல்லம்பள்ளி வட்டாரத்தில் விவசாயிகள் சாகுபடி செய்த நெல், சாமை, தட்டைப்பயிறு, துவரை, உளுந்து ஆகியவற்றை நேரில் சென்று அவர் ஆய்வு செய்தார். பின்னர், வேளாண் துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசியது: தருமபுரி மாவட்டத்தில் 1353 ஹெக்டேரில் விதைப் பண்ணை அமைத்து 943 மெட்ரிக் டன் விதை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 430 ஹெக்டேரில் விதைப் பண்ணை அமைத்து சுமார் 400 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. நிகழாண்டு இலக்கை அடையத் தேவையான விதைகளை கொள்முதல் செய்ய வேண்டும். விதைப் பண்ணைகளில் கலப்புச் செடிகள் இல்லாமல் பராமரிக்க வேண்டும் என்றார் அவர். கூட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் கே.மோகன், விதைச் சான்று உதவி இயக்குநர் எம்.ஆர்.அசோகன், விதைப் பரிசோதனை

அலுவலர் க.கமலா, வேளாண் அலுவலர்கள் மா. சுதா, கோ.முனிகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 83.55 அடியாக இருந்தது.**

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 6,190 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 17.64 டி.எம்.சி.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.15, சென்னையில் ரூ.3.50. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.76, முட்டைக்கோழி கிலோ ரூ.63.

**வாழைத்தார் வரத்து அதிகமானதால் 2 நாள்களாக நடைபெற்ற ஏலம்**

திருச்சி மாவட்டம், திருச்செந்துறை வாழை வணிக வளாகத்துக்கு வாழைத்தார்கள் வரத்து அதிகமானதால் 2 நாள்களாகத் தொடர்ந்து ஏலம் நடத்தப்பட்டது. திருச்செந்துறையிலுள்ள ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் மழை பெய்தாலும் தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, குளித்தலை, லால்குடி, மண்ணச்சநல்லூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வாழைத்தார் வரத்து வரத் தொடங்கியது. பிற்பகல் 3 மணி வரை வரத்து இருந்ததால் 4.30 மணிக்கு ஏலம் தொடங்கியது. ஒரே நாளில் 2083 வாழைத்தார்கள் ஏலத்துக்கு வந்ததால் செவ்வாய்க்கிழமை 1068-ம், புதன்கிழமை 1015-ம் எனப் பிரிக்கப்பட்டு வாழைத்தார்கள் ஏலம் விடப்பட்டன. ரூ.1.40 லட்சம் மதிப்புக்கு வாழைத்தார்கள் ஏலம் போனது. அதிகபட்சமாக ரஸ்தாலி தார்

ஒன்று ரூ.360-, பூவன் ரூ.265, மொந்தன் ரூ.365 என்ற விலைகளிலும், சராசரியாக ஒரு தார் ரூ. 72- என்ற விலையிலும் ஏலம் போனது. திருச்சி மாவட்டத்தில் வாழைப் பயிரிட்டுள்ள விவசாயிகள் தங்களது வாழைத்தார்களை வணிக வளாகத்துக்கு கொண்டு வந்து, தரகர் தொகையின்றி விற்பனை செய்து பயன்பெறலாம் என வேளாண் வணிக துணை இயக்குநர் இரா.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

**<u>அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை</u>**

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தெரிவித்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது: அரியலூர் மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை அளவு 954 மி.மீ., ஆகும். கடந்த 2013-ம் ஆண்டு 624 மி.மீ., மழை மட்டுமே பெறப்பட்டது. நிகழாண்டில் இதுவரை 515 மி.மீ., மழை பெறப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பெறப்பட்ட மழை அளவை விட 102 மி.மீ., கூடுதல் ஆகும். இதனால் சம்பா சாகுபடி பணிகள் தீவிர மடைந்துள்ளன. உரங்கள் வகையில் யூரியா 331 மெ.டன், டி.ஏ.பி. 600 மெ.டன், பொட்டாஷ் 590 மெ.டன் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் 678 மெ.டன் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது. மேலும் விவசாயி களின் தேவைக்கேற்ப உரங்கள் தருவிக்கப்பட்டு தட்டுப்பாடில்லாமல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உரங்களின் விலை விபரம் குறித்து பத்திரிகைகள் மூலம் அறிவிப்பு வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**<u>நடப்பு சம்பா பருவத்துக்கு இதுவரை 233 மெ.டன் சான்று விதைகள்</u>** வேளாண் விரிவாக்க மையம் மூலமும் கூட்டுறவுத் துறை மூலம் 14 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வேளாண் விரிவாக்க மையங் களில் 38 மெ.டன்னும், கூட்டுறவுத் துறையில் 18 மெ.டன்னும் என மொத்தம் 64 மெ. டன் இம்மாதம் கையிருப்பில் உள்ளது. பயறு வகை பயிர்கள் 14 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டு, 3 மெ.டன் கையிருப்பில் உள்ளது. எண்ணெய் வித்துகள் 48 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டு 2 மெ.டன் இருப்பில் உள்ளது. சம்பா நெல் சாகுபடி டெல்டா பகுதியில் 30 ஆயிரம் ஏக்கரிலும் மற்றும் டெல்டா அல்லாத பகுதிகளில் 30,750 ஏக்கரில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை 17500 ஏக்கரில் சாகுபடிப் பணி முடிவுற்றுள்ளது, மீதமுள்ள பரப்பு நவம்பர் மாதம் நடவு மேற்கொள்ளப் படவுள்ளது. விவசாயிகள் கோரிக்கையை ஏற்று நவம்பர் மாதம் முதல் பட்டா மற்றும் சிட்டா நகல்கள் தாமதமின்றி கிடைக்க முழு வீச்சில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்றார் ஆட்சியர். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பா. ரவீந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சடையப்பவிநாயகமூர்த்தி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சுப்பையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

**<u>கிணற்று பாசன விவசாயிகள் சம்பா நடவு பணி தீவிரம்</u>**

கச்சிராயபாயைம்: கச்சிராயபாளையம் பகுதியில் சம்பா சாகுபடி நடவு பணிகள் தீவிரமாக நடக்கிறது. கச்சிராயபாளையம் பகுதியில் 50

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் விவசாயம் செய்கின்றனர். கடந்த ஆண்டு நிலவிய வறட்சியால் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து விவசாயம் முற்றிலும் பாதித்தது. சில தினங்களாக மழை பெய்ததால் அணை மற்றும் இப்பகுதி ஏரிகளுக்கும் நீர் வரத்து அதிகரித்து கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் கிணற்று பாசன விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு நடவு பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த ஆண்டு காலம் கடந்து மழை பெய்ததால் சம்பா சாகு படியில் காலதாமதம் ஏற்பட்டு பொன்னி நெல்லை தவிர்த்து ஏ.டி.டி. 45 வகை நெல் நடவு செய்து வருகின்றனர்.

## விவசாயிகளுக்கு தயார்நிலையில் விதை இருப்பு

மோகனூர்: "சான்று பெற்ற நெல் விதைகள் மற்றும் பயறு வகைகள் தேவையான அளவு இருப்பு உள்ளன' என, மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய சான்று பெற்ற நெல் விதைகள், பயறு வகைகள் (துவரை, பாசிப்பயறு) இருப்பில் உள்ளன. மேலும், விதை நேர்த்திக்குத் தேவையான உயிர் உரங்கள் மற்றும் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான நெல், கரும்பு, தென்னை, பயறு வகைப்பயிர்கள் இருப்பு உள்ளது. நிலக்கடலைக்குத் தேவையான நுண்ணூட்ட உரங்கள் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அவற்றை வாங்கி பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்கலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விதை பரிசோதனைநிலையம் ஆய்வு

தர்மபுரி: தர்மபுரி விதை பரிசோதனை நிலையத்தில், கோவை விதைச்சான்று இயக்குனரக இணை இயக்குனர் பழனிசாமி ஆய்வு செய்தார். விதை பரிசோதனை நிலையத்தில் பெறப்படும் விதை மாதிரிகள், பரிசோதனை முறைகள் மற்றும் சாதனை விபரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும்

பரிசோதனை பணிகளை கவனத்துடன் மேற்கொண்டு தரமான விதைகள், விவசாயிகளுக்கு வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது.விதை பரிசோதனை அலுவலர் அமலா, உதவி இயக்குனர் அசோகன், அலுவலர்கள் சுதா, முனிகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

**கொட்டி தீர்க்கும் பருவமழையால் வளமான குச்சிக்கிழங்கு**

சத்தியமங்கலம் :கடம்பூர் மலைப்பகுதியில், தொடர்ந்து பருவமழை பெய்து வருவதால், வயல்களில் நடப்பட்டிருந்த குச்சிக்கிழங்கு செடிகள், வளமாக காணப்படுகிறது.சத்தியமங்கலம் அடுத்துள்ளது கடம்பூர் மலைப்பகுதி. இது கடல் மட்டத்தில் இருந்து, 750 மீட்டர் உயரம் கொண்ட பகுதியாகும். அப்பகுதியில் மானாவாரி பயிர்கள் நடவு செய்து, அதன் மூலம் வருமானம் பெற்று வருகின்றனர்.ஒவ்வொரு ஆண்டும், இங்கு பருவமழை சரியாக பெய்து வருவதால், கடம்பூர் மலைப்பகுதி மக்கள், சிரமம் இன்றி வாழ்ந்தனர். கடந்த, நான்கு ஆண்டுகளாக, தங்கள் வயல்களில், குச்சிக்கிழங்கு நடப்பட்டு, அதிக மகசூல் கொடுத்து வந்தது. இதனால் கடம்பூர் மலைப்பகுதி மக்களின் வாழ்வு நிலை மேம்பட்டது.ஆனால் கடந்த, இரண்டு ஆண்டுகளாக, பருவமழை பொய்த்ததால், இங்குள்ள விவசாயிகள் வேதனையடைந்தனர். குடிநீருக்கே, தேடி அலையும் நிலை ஏற்பட்டது.எப்படியும் மழை வரும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள், தங்கள் நிலங்களில் குச்சிக்கிழங்கு பயிரிட்டனர்.இவர்களின் நம்பிக்கை பொய்க்காமல், வடக்கிழக்கு பருவமழை, கடம்பூர் மலைப்பகுதியில் கொட்டி தீர்த்தது. இதனால், நடப்பாண்டில் நடப்பட்ட குச்சிக்கிழங்கு வயல், தற்போது செழிப்பாக, பசுமையாக காணப்படுகிறது. கடம்பூர் பகுதியில் உள்ள குளம், குட்டைகள் நிரம்பியது. மேலும் வன ஓடைகளில் தண்ணீர் ஓடிக்கொண்டுள்ளதால், ஒரு ஆண்டுக்கு, இங்கு தண்ணீர் பிரச்னை இருக்காது என்பதால், வனவிலங்குகளால் பாதிப்பும் ஏற்படாது என நம்புகின்றனர்.

## <u>தரமற்ற விதை வினியோகம்ஈரோடு, தஞ்சையில் ஆய்வு</u>

ஈரோடு: தனியார் நிறுவனம் "உமா சீட்ஸ்' என்ற பெயரில், அந்தியூரில் உற்பத்தி செய்த "லாட் 15' ரக நெல் விதைகள், ஈரோடு, தஞ்சாவூர் உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், விற்பனை செய்யப்பட்டிருப்பதால், இரண்டு நாட்களில் ஆய்வு நடத்தி, அறிக்கை சமர்ப்பிக்க, வேளாண் துறை உத்தரவிட்டுள்ளது.ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில், கடந்த, 29ம் தேதி நடந்த வேளாண் குறைதீர் கூட்டத்தில், "உமா சீட்ஸ்' நிறுவன விதை நெல் சாகுபடி செய்த விவசாயிகள், அப்பயிர் குறிப்பிட்ட காலத்தில் கருகி யதாகவும், நஷ்டம் ஏற்பட்டதாகவும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென, கலெக்டர் பிரபாகரனிடம் முறையிட்டனர். வேளாண் அதிகாரிகள் குழு, நேரில் சென்று ஆய்வு நடத்த, கலெக்டர் உத்தரவிட்டார்.கோபி, டி.என். பாளையம் வட்டாரத்தில், பவானிசாசர் விதைப்பண்ணை ஆராய்ச்சி நிலைய தலைவர் துரைசாமி, மாவட்ட இணை இயக்குனர் (விதை ஆய்வு) அண்ணாதுரை, இணை இயக்குனர் செல்வராஜ் ஆகியோர் அடங்கிய, 10க்கும் மேற்பட்ட வேளாண் அலுவலர்கள், புகாருக்குள்ளான பயிர்களை பார்வையிட்டனர்.அப்போது, "குட்ராஸ்' என்ற வேரழுகல் நோயால், பயிர்கள் பாதிக்கப்பட்டது, தெரியவந்தது.தனியார் விதை விற்பனை நிறுவனமான, "உமா சீட்ஸ்', அந்தியூரில் மட்டும், 14,500 கிலோ விதைகளை உற்பத்தி செய்துள்ளது. இந்த விதைகள், ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர் உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டது தெரியவந்தது.இந்நிலையில், ஈரோடு மட்டுமின்றி, தஞ்சாவூர் உள்ளிட்ட பகுதிகளிலும், உமா சீட்ஸ் விதை வாங்கி, பயிரிடப்பட்ட பயிர்களின் பாதிப்பு அளவின் உண்மை நிலை குறித்து ஆய்வு செய்து, இரு நாட்களுக்குள், அறிக்கை தர வேண்டுமென, வேளாண் துறை உத்தரவிட்டுள்ளது."தமிழகம் முழுவதும் ஆய்வு செய்து, விதையில்

குறைபாடு கண்டறியப்பட்டால், அந்நிறுவனம் மீது சட்டப்படி, நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்' என, வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

**கோத்தர் வயல் பகுதியில் கதிர் அறுவடை திருவிழா**

கூடலூர்: கூடலூர் கோத்தர்வயல் பகுதியில் பனியர் இன ஆதிவாசி மக்களின் கதிர் அறுவடை திருவிழா நடந்தது. கூடலூர் புதிய பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள கோத்தர்வயல் பகுதியில், கதிர்அறுவடை திருவிழா நேற்று நடந்தது. முன்னதாக, அங்குள்ள வனதுர்க்கா கோவிலில் சிறப்பு பூஜை செய்து, ஆதிவாசிகள் ஊர்வலமாக வயலுக்கு வந்தனர். வயலில், குல தெய்வத்துக்கு பூஜை செய்து, பாரம்பரிய இசை இசைக்க கதிர் அறுவடை செய்தனர். அறுவடை செய்யப்பட்ட நெற்கதிரை ஒன்றாக கட்டி, ஊர்வலமாக வனதுர்க்கா கோவிலுக்கு எடுத்து வந்தனர். அங்கு நெற்கதிருக்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டு, பிரசாதமாக வழங்கப்பட்டது.

**19,000 விவசாயிகளை இணைக்க இலக்குபயிர் காப்பீடு பிரிமியத்துக்கு 50 சதவீத மான்யம்**

திருச்சி: தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், சிறு, குறு விவசாயிகளுக்கான பிரிமியத் தொகையில், 50 சதவீதம் மான்யம் அறிவித்து, 19 ஆயிரம் விவசாயிகளை திட்டத்தில், இணைக்க இலக்க நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.திருச்சி மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு, 762 மி.மீ., அக்டோபர் மாதம் முடிய பெய்ய வேண்டிய சராசரி மழை, 578.40 மி.மீ., இதுவரை பெறப்பட்ட மழை அளவு, 446.85 மி.மீ,. பெய்துள்ளது. நடப்பு ஆண்டு, 5.55 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, குறுவை நெல், 8,107 ஏக்கரிலும், நடப்பு சம்பா பருவத்தில் டெல்டா பகுதிகளில், 87,250 ஏக்கரிலும், டெல்டா இல்லாத பகுதிகளில், 62,750 ஏக்கரிலும் நெல் சாகுபடி செய்ய

திட்டமிடப்பட்டது.இதுவரை, டெல்டா பாசன பகுதிகளில், 73,575 ஏக்கரிலும் டெல்டா இல்லாத பகுதிகளில், 11,800 ஏக்கரிலும், நெல் நடவுப்பணி முடிந்துள்ளது. வடகிழக்கு பருவ மழையால் டெல்டா இல்லாத வட்டங்களில், ஏரி, குளங்கள் நிரம்பியதால், நடவுப்பணி முழு வீச்சில் நடைபெறுகிறது. சிறுதானியங்களான சோளம், 75,090 ஏக்கர், மக்காசோளம், 22,850 ஏக்கர், துவரை, 8,350 ஏக்கர், நிலக்கடலை, 13,375 ஏக்கர், பருத்தி, 29,938 ஏக்கரிலும் பயிரிட்டுள்ளனர். துவரையில் நாற்று விட்டு நடவு முறை செயல் விளக்கம் அமைக்க, 1,500 எண்கள் இலக்கீடு பெறப்பட்டு, 7,500 ரூபாய் மான்யத்தில் விதை, வேளாண் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. விதை கிராம திட்டத்தில், 50 சதவீத மானியத்தில் சான்று விதைகள் விநியோக இனத்தில், நெல் விதை, 113 டன்களும், பயறு விதை, 5.5 டன்கள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்கள், 86 டன்களும், விவசயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு உள்ளது.தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், நெல் விதைகள், 117 டன்கள் கிலோவிற்கு, 10 ரூபாய் மானியத்தில் வழங்கப்பட்டது. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்க திட்டத்தில், சிறுதானிய பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்க, 5,000 ரூபாய் மானியத்தில், 800 செயல் விளக்க திடல்கள் அமைத்திட இலக்கு நிர்ணயித்து, பயனாளிகள் தேர்வு செய்து வருகின்றனர்.தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், கடன்பெறாத சிறு, குறு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதற்கான பிரிமீயத் தொகையில், 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.இதன் மூலம், ஒரு ஏக்கர் சம்பா நெல் பயிரை காப்பீடு செய்வதற்கு, 117 ரூபாய் பிரிமீயத் தொகையாக செலுத்தி, இத்திட்டத்தில் பங்கு பெறலாம். திருச்சி மாவட்டத்திற்கு, 19,000 விவசாயிகளை திட்டத்தில் இணைத்திட இலக்கீடு பெறப்படுகிறது.இதுவரை, 3,950 விவசாயிகள், இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்துள்ளனர். இத்திட்டத்தில் இணைந்து

பயன்பெற சம்பா நெல் பயிருக்கு, நவம்பர், 15ம் தேதி கடைசி நாள்.நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான உரங்கள் யூரியா, 3,320 டன், டி.ஏ.பி., 3,580 டன், பொட்டாஷ், 4,030 டன், மற்றும் கூட்டுரம், 4,998 டன், மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக் கடைகளில் இருப்பில் உள்ளது, என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**உருளை கிழங்கு அறுவடை துரிதம்**

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில், உருளைக் கிழங்கு அறுவடை களை கட்டியுள்ளது. ஊட்டியை சுற்றியுள்ள பகுதிகளில், அதிகளவில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில மாதங்களாக பெய்து வரும் மழையால் உருளைக் கிழங்கு சாகுபடி களை கட்டியது. கேத்தி பாலாடா உட்பட இடங்களில் தற்போது உருளைக் கிழங்கு அறுவடை துவங்கியுள்ளது. சந்தையில் ஒரு கிலோ 30 - 35 ரூபாய்க்கு மேல் விலை போவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**"மெகாசைஸ்' பப்பாளி மக்கள் ஆச்சரியம்**

பந்தலூர்: பந்தலூர் அருகே அம்பலமூலா பகுதியில் மெகா சைஸ் பப்பாளி அனைவரையும் கவர்ந்தது. நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே வட்டக்கொல்லி பகுதியில் டீக்கடை நடத்தி வருபவர் தாமஸ். இவர் கடையின் முன்பாக பப்பாளி மரத்தை வளர்த்து வருகிறார். அந்த மரத்தின் ஒரு கிளையில் மட்டும் மூன்று பப்பாளி இணைந்து ஒன்றாக காய்த்துள்ளது. இந்த மெகா சைஸ் பப்பாளியை மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.இது குறித்து தாமஸ் கூறுகையில், "" இந்த மரத்துக்கு இதுவரை ரசாயன உரங்கள் ஏதும் பயன்படுத்த வில்லை; நாட்டு உரம் மட்டுமே போட்டேன். இந்த பழத்தை பார்த்து எனக்கே ஆச்சரியம் ஏற்பட்டது," என்றார்.

## தஞ்சாவூர் மாவட்ட வேளாண்துறை அறிக்கை99, 522 ஹெக்டரில் சம்பா நெல் சாகுபடி

தஞ்சாவூர் :தஞ்சாவூர் மாவட்டத்தில், அக்டோபர் மாதம் முடிய, 99 ஆயிரத்து, 522 ஹெக்டரில் சம்பா நெல் சாகுபடி நடந்துள்ளதாக, வேளாண்மைத்துறை அறிக்கை அளித்துள்ளது.இது குறித்து வேளாண்மை இணை இயக்குனர் சேகர் வெளியிட்டுள்ள அறிக்கை:தஞ்சாவூர் மாவட்டத்தில், சம்பா மற்றும் தாளடி பருவத்துக்கு, ஒரு லட்சத்து, 38 ஆயிரத்து, 660 ஹெக்டேரில் நெல் சாகுடி செய்வதென, இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை, 97 ஆயிரத்து, 622 ஹெக்டேரில் நடவு மூலமாகவும், 1,860 ஹெக்டேரில் நேரடி விதைப்பு மூலமாகவும், நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில், 63 ஆயிரத்து, 481 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யப் பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்துவரும் நிலையில், மாவட்டம் முழுவதும் நெல் சாகுபடி பணிகள் மும்முரமாக நடக்கிறது. நவம்பர் மாத இறுதிக்குள், சம்பா சாகுபடிக்கான இலக்கு பூர்த்தியாகும், என எதிர்பார்க்கப்படுகிறது. சம்பா பருவத்துக்கான நாற்றங்கால், 1,282 ஹெக்டேரிலும், தாளடி பருவத்துக்கான நாற்றங்கால், 528 ஹெக்டேரிலும் அமைக்கப்பட்டுள்ளது.விவசாயிகளுக்கு வழங்க, தரமான நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுவரை, 1,010 மெட்ரிக் டன் நெல் விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதுபோல், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. யூரியா, 4,413 மெட்ரிக் டன், டி.ஏ.பி., 4,196 மெட்ரிக் டன், பொட்டாஷ் 3, 604 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ், 2,386 மெட்ரிக் டன் வீதம் உர விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு தயாராக உள்ளது.மாவட்டத்தில், தற்போது, குறுவை பருவத்தில் சாகுபடி

செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் அறுவடை நடக்கிறது. இதுவரை, 31 ஆயிரத்து, 50 ஹெக்டரில் அறுவடை நடந்துள்ளது. ஏக்கருக்கு, 6,700 கிலோ வீதம் விவசாயிகளுக்கு மகசூல் கிடைத்துள்ளது.விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு, மாவட்டத்தில் மீண்டும் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயிர் கடன் பெறாத விவசாயிகள் நவம்பர், 15ம் தேதிக்குள் பிரிமியத் தொகை செலுத்தவேண்டும். ஏக்கருக்கு சிறு மற்றும் குறு விவசாயிகள், 115 ரூபாய் வீதமும், இதர விவசாயிகள், 128 ரூபாய் வீதமும் பிரிமியம் செலுத்த வேண்டும்.இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொடர்ந்து மறுகால் பாயும் சோத்துப்பாறை அணை

பெரியகுளம்: சோத்துப்பாறை அணை நீர் பாசனத்திற்கு திறந்துவிடப்பட்டு எட்டுநாட்கள் ஆகியுள்ள நிலையில் தொடர்ந்து மறுகால் பாய்கிறது. கொடைக்கானல் மலைப்பகுதி மற்றும் சோத்துப்பாறை அணைப்பகுதியில் பெய்து வரும் மழையால் சோத்துப்பாறை அணைக்கு தண்ணீர் வரத்து உள்ளது. அக்.,17ல் அணை நிரம்பி மறுகால் பாய்ந்தது. பாசனத்திற்காக அக்.,23ல் இருந்து மார்ச் 15 வரை 145 நாட்களுக்கு வினாடிக்கு 30 கன அடி முதல் 25 கன அடி வீதம் 145 நாட்களுக்கு அணை திறக்கப்படுகிறது. தற்போது அணைக்கு வரும் 60 கனஅடி நீர் வரத்தும் அப்படியே வெளியேறுகிறது.சோத்துப்பாறை நீரால் பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய்கள் நிரம்பி வருகிறது. பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய்களில் உள்ள 1,825 ஏக்கர் விவசாய நிலங்களும். புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள 1040 ஏக்கர் விவசாய நிலங்களும் பயன்றுபெறும். இவைகளை தவிர பெரியகுளம் தாலுகா பகுதியில் உள்ள 35 கண்மாய்களும்

நிரம்பி வருகிறது. அணைப்பகுதியை கலெக்டர் பழனிசாமி, பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பார்வையிட்டனர். பெருமளவு கண்மாய்கள் நிரம்பி விட்டது. விவசாயிகள் கண்மாய் மதகுகளை திறப்பது குறித்து, பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் ஆலோசனை பெற்று அவர்களுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும், என தெரிவித்தார்.

**<u>கால்நடை பாதுகாப்பது குறித்த ஆலோசனை</u>**

ஆண்டிபட்டி: தொடர் மழை மற்றும் ஈரத்தில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க கால்நடைத்துறையினர் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளனர். ஆண்டிபட்டி தாலுகாவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் உள்ளன. விவசாயப் பகுதிகளில் வளர்க்கப்படும் கால்நடைகள் பெரும்பாலும் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லப்படும். கடந்த சில நாட்களாக பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. மழையால் செடி, கொடிகள் தழைத்து பசுந்தீவனங்கள் அதிகரித்துள்ளன. மழையால் விளைந்துள்ள பசுந்தீவனங்களை கால்நடைகள் சாப்பிடும்போது கழிச்சல் நோய் ஏற்படும். இதனால் புதிதாக பறித்த இலை தழைகளை நன்கு காய வைத்த பின் கால்நடைகளுக்கு தீவனமாக தர வேண்டும். தற்போதுள்ள சூழலில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல் பாதுகாப்பான இடத்தில் கட்டி வைத்து பராமரிக்க வேண்டும். ஈரமான இடங்களில் கால்நடைகளை கட்டி வைப்பதால் கால் வீக்க நோய் ஏற்படும். பால் கறந்தவுடன் மாடுகளை படுக்க வைக்காமல் சிறிது நேரம் கழித்து படுக்க வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் கால்நடைகளை மடிநோயில் இருந்து பாதுகாக்கலாம். மழைகாலங்களில் இடியின் தாக்கம் அதிகம் இருக்கும். இதனால் கால்நடைகளை மரத்திற்கு கீழும், திறந்த வெளியிலும் கட்டிப்போடுவதை தவிர்க்க வேண்டும். ஈரம் இல்லாத காய்ந்த இடத்தில் செட் அமைத்து கால்நடைகளை பராமரிப்பது பாதுகாப்பாக இருக்கும். கால்நடைகள்

வழக்கத்திற்கு மாறான நிலையில் இருந்தால், உடனடியாக அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருத்துவர்களிடம் ஆலோசனை பெறவேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## பரமக்குடியில் விவசாயப்பணிகள் மும்முரம்: 3 வருடத்திற்குப் பின் நெல் சாகுபடி

பரமக்குடி: பரமக்குடி சுற்றுவட்ட பகுதிகளில் 3 வருடமாக மழையின்றி விவசாயம் கானல் நீராகவே இருந்தது. தற்போது பெய்து வரும் பருவமழையை நம்பி விவசாயிகள் உற்சாகமாக நெல் பயிரிட்டுள்ளனர். பரமக்குடி, போகலூர், நயினார்கோவில் ஒன்றியங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் வானம் பார்த்த பூமியாகவே உள்ளது. கடந்த 3 வருடங்களாக மழையின்றி வைகை ஆற்று படுகைகளில் சில ஏக்கரில் மட்டும் ஆழ்குழாய் அமைத்து விவசாயம் செய்யப்பட்டு வந்தது. விவசாயிகள் சிறுதானிய வகைகள், பருத்தி, மிளகாய் என பயிரிட்டனர். கடந்த 15 நாட்களாக பரமக்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல கண்மாய்களில் மழைநீர் எட்டிப் பார்த்துள்ளது. வயல் வெளிகளில் விதைப்புக்கு தேவையான மழை கிடைத்துள்ளதால், பரவலாக நெல் சாகுபடியை விவசாயிகள் துவக்கியுள்ளனர். இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:ராமச்சந்திரன், நயினார்கோவில்: மூன்று வருடமாக போதிய மழையின்றி, நெல் விவசாயம் கிடையாது. கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் கனமழை மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. விதைப்புக்கு முன் 5 முறை உழவு செய்துள்ளேன். ஆவணி மாதம் பெய்த சிறு மழையை நம்பி ஐ.ஆர். 20 நெல்லை விதைத்தேன். தற்போது உரமிட்டு, களையெடுப்பு பணிகளில் மும்முரமாக இறங்கியுள்ளேன்.நாகவள்ளி, வல்லம்: பருவம் தவறி மழை பெய்தாலும், ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என தொடர்ந்து மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் பல ஏக்கரில் நெல்

விதைத்துள்ளோம். தற்போது களை எடுப்பு பணிகள் நடந்து வருகிறது. இது வரை மிளகாய், பருத்தி என பயிரிட்டு வந்ததால் போதிய வருமானம் கிடையாது. இந்த வருடம் நெல் விவசாயம் கை கொடுக்கும் என நம்புகிறோம், என்றார்.

**<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

வருஷநாடு: கண்டமனூர் பரமசிவன்கோவில் கண்மாய் 15 ஆண்டுகளுக்கு பின் நிரம்பியுள்ளதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கடமலை-மயிலை ஒன்றியத்திற்கு உட்பட்ட கண்டமனூர் பரமசிவன் கோவில் கண்மாய் சுமார் 17 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் கண்மாய் முழுமையாக நிரம்பவில்லை. இதனால் கண்மாயை சுற்றியுள்ள விவசாயிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வந்தனர். கோடை காலங்களில் கண்டமனூர் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு அதிகளவில் ஏற்பட்டது. தற்போது கடந்த சில தினங்களாக பெய்து வரும் கன மழையால் ராமர் ஓடை உட்பட ஐந்து ஓடைகளில் நீர்வரத்து ஏற்பட்டு கண்மாயை வந்தடைகிறது. இதனால் பரமசிவன்கோவில் கண்மாய் 15 ஆண்டுகளுக்கு பின் முழுமையாக நிரம்பியுள்ளதால் விவசாயிகள் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் கண்டமனூரை சேர்ந்த சமூக ஆர்வலர் அங்குச்சாமி கூறுகையில், "இந்த கண்மாய் இந்தாண்டு மட்டுமே முழுவதுமாக நிரம்பியுள்ளது. இந்த பகுதி விவசாய கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும்,' என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 35 ஆண்டுகளுக்கு பிறகு 136 அடியை எட்டியது பெரியாறு அணை



கூடலூர் : முல்லை பெரியாறு அணை நீர்மட்டம் 35 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று 136 அடியை எட்டியது. மழை தொடரும் பட்சத்தில் 142 அடி வரை நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளதாக தமிழக அதிகாரிகள், விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். முல்லை பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் தேக்க உச்சநீதிமன்றம் கடந்த மே 7ல் உத்தரவிட்டது. இதையடுத்து அதற்கான ஏற்பாடுகளில் தமிழக அரசு பொதுப் பணித் துறை அதிகாரிகள் ஈடுபட்டனர். இந்த நிலையில், நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர் மழை காரணமாக முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று 136 அடியை எட்டியது. அணையிலிருந்து குறைந்த அளவே (456 கன அடி) தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நேற்று மழையில்லாததால் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1,916 கன அடியாக குறைந்தது. அணையின் இருப்பு 6,068 மில்லியன் கன அடி. கடந்த 13.11.1979க்கு பிறகு, 35 ஆண்டுகளுக்கு

பின்னர் அணையின் நீர்மட்டம் 136 அடியை எட்டியிருப்பது குறிப்பிடத் தக்கது.தற்போது வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்தால், அணையில் 142 அடி தண்ணீர் தேக்க அதிக வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறையினர் தெரிவித்துள்ளனர். உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி பெரியாறு அணையில் இம்முறையாவது 142 அடி தண்ணீர் தேக்க வடகிழக்கு பருவமழை கை

**துவரை சாகுபடியில் நுனி கிள்ளுதல் நுட்பத்தை கடைபிடிக்க அறிவுறுத்தல்**

அரூர், : துவரை சாகுபடியில், விவசாயிகள் புதிய தொழில் நுட்ப த்தை கடைபிடிக்க வேண்டும் என்று அரூர் உதவி வேளாண்மை அலுவலர், தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர். இது குறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை: தற்போது நீர்வள ஆதாரங்கள் குறைந்து வருவதுடன், உற்பத்தி செலவு அதிகமாகி வருகிறது. இதனால், விவசாயிகள் துவரை நாற்றங்கால் நடவு முறையை பின்பற்றி கூடுதல் மகசூல் பெறலாம். இதன்படி, துவரை விதையை 0.2 சதவீதம் கால்சியம் குளோரைடில் ஒரு மணி நேரம் ஊற வைத்து பின்னர் விதையை கடினமாக்க 7 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். மேலும் கடினமான விதைகளை, 100 கிராம் ரைசோபியம் மற்றும் 100 கிராம் பாஸ்போ பாக்டீரியம் கொண்டு விதை நேர்த்தி செய்து, ஒரு மாதம் ஆகிய நாற்றுகளை தனி பயிராக இருந்தால் 5க்கு 3 அளவில் இடைவெளி விட்டும், ஊடு பயிராக இருந்தால் 6க்கு 3 அளவில் இடைவெளி விட்டும் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த பின்னர் 20 - 30 நாட்களில் கனிம உரங்கள் தழை சத்து, மணிசத்து, சாம்பல் சத்து ஆகியவற்றை இட வேண்டும். முனை வளர்ச்சியை தடுக்க, தாவரங்களை நுனியில் கிள்ளி விட வேண்டும். இதனால் மேல் நோக்கி வளர்தல் குறைந்து பக்கவாட்டில் அதிக கிளைகள் உருவாகும். பூக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து, மகசூல் அதிகம் கிடைக்கும். எனவே, துவரை

விவசாயிகள் மேற்கண்ட முறைகளை பயன்படுத்தி மகசூல் அதிகம் பெற வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## கோவில்பட்டியில் 24 மி.மீ மழை பதிவு

திருச்சி,: திருச்சி மாவட்டம் முசிறியில் நேற்று 24 மி.மீ மழை பதிவானது. வடகிழக்கு பருவமழை கடந்த 17ம்தேதி துவங்கியது. இதைத் தொடர்ந்து வங்கக்கடலில் உருவான காற்றழுத்தம் வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கையை ஒட்டிய மன்னர் வளைகுடா பகுதியில் நிலை கொண்டிருந்தது. அது மேலும் வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறியுள்ளது. தமிழகத்தில் கடந்த 15 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. காவிரி மற்றும் பாலாறு நீர் பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு தற் போது 20ஆயிரம் கனஅடி அளவிற்கு நீர்வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணை மூடப் பட்டுள்ளதாலும், நீர்வரத்து அதிக அளவில் உயர்ந்துள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் வடகிழ க்கு பருவமழை நீடித்து வருவ தால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. டெல்டா பாசனத்திற்கு ஆதாரமான மேட்டூர் அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து வருவதால் திருச்சி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது உள்ள தண் ணீரை கொண்டு சம்பா சாகுபடியை முழுமையாக செய்யலாம் என விவசாயிகள் கூறுகின்றனர். திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரையான நிலவரத்தில் லால்குடி, மணப்பாறை, புள்ளம்பாடி, துறையூர், திருச்சி டவுன், நந்தியார் தலைப்பு, கல்லக்குடி, சமயபுரம், தேவிமங்கலம், சிறுகுடி, தென்பரநாடு, பொன்மலை, திருச்சி ஜங்சன், துவாக்குடி உள்ளிட்ட பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதில் அதிக பட்சமாக முசிறி கோவில்பட்டியில் 24.20 மி.மீ மழை பெய்தது. தா. பேட்டையில் குறைந்த பட்ச மாக 2 மி.மீ

மழை பதிவானது. திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8மணி வரையிலான 24மணி நேரத்தில் பெய்த மழை அளவு(மி.மீ): முசிறி 24, திருச்சி ஏர்போர்ட் 7.10, மருங்காபுரி 22.20, பொன்னணியாறு டேம் 16.20, நவலூர்குட்டப்பட்டு 12.20, வாத்தலை அணைக்கட்டு 7.50, புலிவலம் 6, குப்பம்பட்டி 10. மொத்தம் 131.40 மி.மீ மழை பெய்துள்ளது. சராசரியாக 5.26 மிமீ பதிவாகியுள்ளது.

## <u>திருச்செந்துறையில் 2,083 வாழைத்தார்கள் ரூ.1.48 லட்சத்துக்கு ஏலம்</u>

திருச்சி, : திருச் செந்துறை வாழை வணிக வளாகத்தில் கடந்த 2நாளில் 2,083 வாழைத்தார்கள் ரூ.1லட்சத்து 48ஆயிரத்து 780க்கு ஏலம் போனது. ஸ்ரீரங்கம் திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் கடந்த 12வாரமாக வாழைத் தார்கள் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. இந்த வாரம் செவ்வாய் மற்றும் புதன்கிழமை ஆகிய 2நாட் கள் தொடர்ந்து வாழைத் தார்கள் பொதுஏலம் நடைபெற்றது. கடந்த 2நாட்கள் நடந்த ஏலத்தில் ஒரத்தநாடு, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, கந்தர்வகோட்டை, மண் ணச்சநல்லூர், கிளிய நல்லூர், கொடியாலம், போதாவூர், பெட்ட வாய்த்தலை, குளித்தலை, லால்குடி, கூகூர், சிறுகாம்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத் தார்களை லாரிகளில் கொண்டு வந்தனர். இதேபோல் ஏலம் எடுப்பதற்காக பெருகமணி, சிறுகமணி, பெட்ட வாய்த்தலை, குளித்தலை, கோப்பு, அந்தநல்லூர், காட்டுப்புத்தூர், தொட்டியம், மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகளும் வந்திருந்தனர். பூவன், ரஸ்தாலி, மொந்தன் ரக வாழைத் தார்கள் ஏலத்திற்காக குவிந்தன. இந்த பொது ஏலத்தில் 2,083 வாழைத்தார்களுடன் 26 விவசாயிகள் பங்கேற்றனர். 21 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு

வாழைத் தார்களை ஏலம் எடுத்தனர். மொத்தம் 1,48,780 மதிப் பிற்கு ஏலம் நடைபெற்றது. இதில் ரஸ்தாலி அதிகபட்சமாக ரூ.360க்கும், பூவன் அதிகபட்சமாக ரூ.265க்கும், மொந்தன் அதிகபட்சமாக ரூ.365க்கும் ஏலம் போனது. சராசரியாக ஒருதார் ரூ.72க்குஏலம் போனது. தரமான வாழைத் தார்கள் அதிகபட்ச விலைக்கு ஏலம் போனது. இதுகுறித்து வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில், தொடர்மழை பெய்தும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த வாழைத் தார்களை ஏலத்திற்காக கொண்டு வந்தனர். இதில் முதல்நாள் 1,068 வாழைத் தார்கள், 2வது நாளாக 1,015 வாழைத்தார்கள் ஏலம் விடப்பட்டது. இதுவரை நடைபெற்ற ஏலத்தில் இந்த வாரத்தில்தான் அதிக பட்சமாக 2,083 வாழைத் தார்கள் ஏலம் விடப் பட்டுள்ளது. இடைத்தரகர்கள் இன்றி, கமிஷன் இல்லாமல் ஏலத்தில் பங்கேற்ற விவ சாயிகள் அனைவருக்கும் உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப் பட்டது. உற்பத்தி செய்த வாழைத் தார்களுக்கு இந்த பொது ஏலம் மூலம் நல்ல விலை பெறுவதோடு, எந்தவித கமிஷனின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவதால் திருச்சி மட்டுமல்லாமல் டெல்டா மாவட்டங்களில் இருந்தும் கூட விவசாயிகள், வியாபாரிகள் பொது ஏலத் தில் கலந்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

## <u>நீடாமங்கலத்தில் வெண் பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி</u>

நீடாமங்கலம், : திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் வெண்பட்டுப்புழு வளர்ப்பு 5 நாள் பயிற்சி வகுப்பு துவங்கியது. தஞ்சை வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தனி அலுவலர் சாமிஅய்யன் தொடங்கி வைத்தார். திருச்சி பட்டு வளர்ச்சிதுறை மண்டல துணை இயக்குனர்(பொ) மல்லிகா முன்னிலை வகித்தார். நீடாமங்கலம் அறிவியல் நிலைய தலைவர் சோழன் வரவேற்றார்.

திருவாரூர் மாவட்ட கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் பேசினர். பட்டு வளர்ச்சி துறையை சேர்ந்த ரமேஷ், அருள் மொழி, நடராஜன், உதவி பேராசிரியர் ரமேஷ் ஆகி யோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். சாமிஅய்யன் பேசுகையில், வெண்பட்டுப்புழு வளர்ப்பதற்கு தேவைப்படும் மல்பெரி சாகுபடி, வளர்ப்பு தொழில்நுட்பம், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி பேசி னார். திருவாரூர், தஞ்சாவூர், நாகை, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த 65 விவசாயிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி இன்று மாலை முடிவடைகிறது.

## <u>நோயில் இருந்து பயிரை காக்க தாவர பூச்சிக்கொல்லியை பயன்படுத்த வேண்டும் வேளாண் துறை வலியுறுத்தல்</u>

அன்னவாசல், : பயிர் களை நோய்த் தாக்குதலில் இருந்து காத்திடவும், சுற்றுப்புறச் சூழலை மாசில் இருந்து பாதுகாத்திடவும் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகளையே பயன்படுத்த வேண்டும் என்று புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜ ஹான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் மேலும் கூறியதாவது: வேம்பின் அனைத்து பாகங்களும் பலன் தரும். வேப்பந்தழையை உரமாகவும், பூச்சி மருந்தாகவும், வேப்பவித்துக் கரைசலை பூச்சிக்கொல்லி யாகவும், வேப்பம் புண்ணாக்கை உரமாகவும், யூரியா போன்ற ரசாயன உரத்துடன் கலந்து இட வேண்டும். இதனால் யூரியாவின் பயன் அதிகரிக்கும். மேலும் வேப்ப எண்ணெயை தனியாகவும், இதர பூச்சி மருந்துகளுடன் கலந்தும் பூச்சி நாசினியாக பயன்படுத்தலாம். வேப்பிலையில் தழைச்சத்து 2.5%, மணிச்சத்து 0.6% , சாம்பல் சத்து 2.0% அளவில் உள்ளன. இதனை நன்செய் நிலங்களுக்கு இடலாம். வேப்பந்தழை

இட்ட நிலத்தில் கரையான் பாதிப்பு இருக்காது. நூற்புழுவின் தாக்குதல் வெகுவாகக் குறைந்துவிடும். உலர்ந்த வேப்பிலைகளை நெல், சோளம் போன்ற தானியங்களுடன் கலந்து வைத்து வண்டுகள், அந்துப்பூச்சிகள் மற்றும் துளைப்பான்களின் தாக்குதலிலிருந்து தடுக்கலாம். 10 கிலோ வேப்பங்கொட்டையை நன்கு தூளாக்கி 20 லிட்டர் நீரில் கரைத்து ஒரு நாள் வைத்திருந்து வடிகட்டி 200 லிட்டர் நீர் சேர்த்து ஒட்டும் திரவம் 200 மில்லி அல்லது 100 கிராம் காதிபார் சோப்பு சேர்த்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். வேப்பங்கொட்டைக் கரைசல் தெளிப்பதன் மூலம் பயிர்களில் தோன்றும் கம்பளிப் புழுக்கள், அசுவினிகள், தத்துப்பூச்சிகள், புகையான், இலைச்சுருட்டுப் புழு, ஆணைக்கொம்பன், கதிர்நாவாய்ப் பூச்சி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம். பயிர்களைத் தாக்கும் சாம்பல் நோய், மஞ்சள் வைரஸ் நோய் முதலியவைகளைக் கட்டுப்படுத்த வேப் பெண்ணெய்க் கரைசல் பயன்படும். 3 லிட்டர் வேப்பெண்ணெய் உடன் 200 மில்லி ஒட்டும் திரவம் அல்லது காதி துணி சோப் நன்றாகக் கலந்து 200 லிட்டர் நீர் சேர்த்துப் பயன்படுத்தலாம். வேப்பம் புண்ணாக்கில் தழைச்சத்து 5.2%, மணிச்சத்து 1.1% , சாம்பல் சத்து 1.5% உள்ளன. வேப்பம் புண்ணாக்கை யூரியாவுடன் 1 : 5 என்ற விகிதத்தில் (அதாவது 1 பங்கு வேப்பம் புண்ணாக்கு, 5 பங்கு யூரியா) கலந்து இட்டால் யூரியாவின் சத்து, பயிருக்கு நீண்ட நாட்கள் கிடைக்க உதவும். தழைச்சத்து வீணாவதும் குறையும். நொச்சித்தழை 5 கிலோ மற்றும் வேப்பந்தழை 5 கிலோ ஆகியவற்றை ஒரு பானை நீரில் போட்டு கொதிக்க வைத்து அதனை கூழாக்கி ஓர் இரவு வைத்திருந்த பின்னர் வடிகட்டி அதனை 100 லிட்டர் நீரில் கலந்து 1 ஏக்கர் அளவில் தெளித்து நெற்பயிரில் இலைச்சுருட்டுப் புழு, குருத்துப் புழு, மற்றும் கதிர்நாவாய்ப் பூச்சி ஆகியவற்றைக் கட்டுப் படுத்தலாம். நொச்சி மற்றும் வேப்பந்தழையினை அரைக்க வசதியுள்ள

இடங்களில் கொதிக்க வைக்க வேண்டிய அவசியமில்லை. வேம்பில் அசாடிரக்டின், நிம்பிடின் போன்ற ரசாயன பொருட்கள் இருப்பதால் பூச்சி நோய் தடுப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது என்றனர்.

## <u>குறைந்த நாளில் பயறு வகைகளில் அதிக வருமானம் பெற தரமான விதை உற்பத்தி செய்யும் வழிமுறை வம்பனில் சிறப்பு பயிற்சி</u>

ஆலங்குடி, : குறைந்த நாட்களில் பயறு வகை களில் அதிக வருமானம் பெற தரமான விதைகளை உற்பத்தி செய்யும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமுக்கு பூச்சியியல் துறை பேராசிரியர் பசுபதி தலைமை வகித்தார். விதை அறிவியல் துறை உதவிப் பேராசிரியர் கதிரவன் பேசியதாவது: பயறு வகைப் பயிர்களில் உளுந்து, பாசிபயறு மற்றும் துவரை முக்கியமான பயிர்களாகும். தரமான விதையே 10 முதல் 20 சதவிகிதம் மகசூல் அதிகரிப்பதற்கு முக்கியப் பங்கு வகிக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டம் பயறு வகை பயிர்கள் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற மண்ணாகும். சரியான ரகங்கள் மற்றும் முறையான தொழில்நுட்பங்களைப் பயன் படுத்துவதன் மூலம் கூடுதல் மகசூல் பெறலாம். விதைப் பயிர் உற்பத்தி என்பது வேளாண் பயிர் உற்பத்தியில் இருந்து மாறுபட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டது. விதைப் பயிர் உற்பத்தியில் விதைப்பு முதல் அறுவடை வரை உயரிய அறிவியல் ரீதியான தொழில்நுட்பங்களைக் கையாளுவதுடன் தகுந்த ஆய்வாளர்களின் மேற்பார்வையில் உற்பத்தி செய்யப்படுகிறது. விதை உற்பத்தி ஒரு லாபகரமான தொழில் தமிழ்நாட்டில் விதை உற்பத்தி தொழில் சிறந்த முறையில் வளர்ச்சி அடைய வேண்டுமானால், விவசாயிகள் சுய தேவைக்கு அவர்களாகவே உற்பத்தி செய்ய முன்வரவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், ஒவ்வொரு முறையும் பயிர் செய்ய தரமான விதைகளை அவர்களாகவே உற்பத்தி செய்து கொள்ள முடியும். அரசாங்கம் சான்று விதை உற்பத்தி செய்வோருக்கு மானியம்

வழங்குகிறது. விதை உற்பத்தி தொழிலை மேற்கொள்வதன் மூலம் வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. விதை உற்பத்திக்குத் தேர்வு செய்யப்படும் நிலம் வளமானதாவும், களர் மற்றும் உவர் தன்மையற்றதாகவும் இருத்தல் வேண்டும். ஏதுவான சூரிய வெளிச்சம் மற்றும் நல்ல நீர்ப்பாசன வசதி கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். விதை உற்பத்தியில் ரகத் தேர்வு மிக முக்கியமானதாகும். அதிக மகசூல், நோய் மற்றும் பூச்சிக்கு எதிர்ப்புத் தன்மை மற்றும் நுகர்வோர் விரும்பத்தக்க ரகமாக இருக்க வேண்டும். அவ்வாறு நல்ல ரகங்கள் என்று கண்டறியப்பட்டவை உளுந்து வம்பன் 4, வம்பன் 5 மற்றும் வம்பன் 6, பாசிபயிறு வகையில் வம்பன் 2 மற்றும் வம்பன் 3, துவரை வகையில் வம்பன் 2 மற்றும் வம்பன் 3 ஆகிய ரகங்கள் பயிரிடுவது சாலச் சிறந்ததாகும். விதைகளை பூஞ்சாணக் கொல்லி மற்றும் பூச்சிக்கொல்லி பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வதன் மூலம் விதைகள் மற்றும் மண்ணின் மூலம் பரவும் நோய்களிலிருந்து விதைகளைப் பாதுகாக்கலாம். கார்பன்டெசிம் 2 கிராம் கிலோ விதை க்கு பயன் படுத்த வேண்டும். விதைப் பயிரானது மற்ற ரகப் பயிர்களிலிருந்து குறிப்பிட்டளவு பயிர் விலகுதூரம் கொண்டதாக இருத்தல் வேண்டும். பயிரின் மகரந்தச் சேர்க்கை க்கு ஏற்ப பயிர் விலகு தூரம் மாறுபடும். எடுத்துக்காட் டாக சான்று விதை உற்பத்தியில் உளுந்து மற்றும் பாசிபயறுக்கு 5 மீ இடைவெளி விடவேண்டும். விதைப் பயிருக்கு தொழு உரம் மிகவும் அவசியமாகும். தழை, மணி மற்றும் சாம்பல் சத்தை ஏக்கருக்கு முறையே 20 கிலோ, 60 கிலோ மற்றும் 10 கிலோ என்ற அளவில் இடவேண்டும். மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து வேர்களின் வளர்ச்சிக்கும், விதையின் வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமானதாகும். நிலத்தின் குறைபாட்டிற்கு தக்கவாறு நுண்ணூட்ட சத்துகளின் தேவையையும் கண்டறிந்து இடுதல் அவசியம். கலவன்கள் நாம் பயிரிட்ட தாயாதி விதைகளின் குணாதியங்களிலிருந்து மாறுபட்டுத்

தெரிகின்ற செடிகள் ஆகும். இவ்வாறு மாறுபட்ட செடிகளையும் மற்றும் நோய்வாய்பட்ட செடி களையும் தக்க தருணத்தில் முறையே பூப்பதற்கு முன்பும், நோய் பிற செடிகளுக்கு பரவுவதற்கு முன்பும் அகற்றி விடுதல் வேணடும். இதனால் இனக் கலப்பில்லாத சுத்தமான விதைகளை உற்பத்தி செய்யலாம். வினையியல் முதிர்ச்சிக்குப் பிறகு விதைப் பயிரை அறுவடை செய்தல் வேண்டும். அதற்கு முன்பு அறுவடை செய்வதால் விதை பிரித்தெடுத்தல் மற்றும் தூய்மை செய்யும் போது அதிகமான இழப்பைத் தருகின்றது. காலம் தாழ்த்தி அறுவடை செய்யும் போது விதைகள் கொட்டி விடுவதோடு அதிகளவு பூச்சி மற்றும் பூசணங்களின் தாக்குதலுக்குள்ளாகி மிகுந்த இழப்பை ஏற்படுத்துகிறது. எனவே சரியாக முறைப்படுத்தப்படாத விதை தொழில்நுட்பங்களை விதை உற்பத்தி சுழற்சியின் முக்கிய பகுதிகளான அறுவடை மற்றும் விதை பிரித்தலில் கையாளுவதால் நல்ல தரமான விதைகளை பெறலாம் என்றார். முகாமில் உழவியல் துறை உதவிப் பேராசிரியர் மாரிமுத்து மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

## <u>4 ஆண்டுகளுக்கு பிறகு பேச்சிப்பாறை அணை 40 அடியை எட்டியது</u>

குலசேகரம், : பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 4 ஆண்டுகளுக்கு பிறகு 40 அடியை எட்டியுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. மலைப்பகுதிகளிலும், மலையோர பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகள், நீரோடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அணைகள், குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. நேற்று முன்தினம் மாலை 2வது முறையாக சிற்றாறு 1 அணையில் இருந்து 360 கனஅடி உபரி நீர் மறுகாலில் திறந்து விடப்பட்டது. இதனால் கோதையாற்றில் நீர் வரத்து அதிகரித்தது. அதே நேரத்தில் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால்

கோதையாற்றில் பெருக்கெடுத்து ஓடிய வெள்ளம் காரணமாக திற்பரப்பில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அருவியில் கலங்கிய நிலையில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. மழை காரணமாக திற்பரப்புக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. வெள்ளப்பெருக்கு காரணமாக அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால் இங்கு வருகிறவர்கள் திற்பரப்பில் கலங்கி கொட்டும் தண்ணீரை வேடிக்கை பார்த்து செல்கின்றனர். பேச்சிப்பாறை அணை நீர்பிடிப்பு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் நீரோடைகள் மற்றும் ஊற்றுகளில் பெருக்கெடுத்து ஓடும் தண்ணீர் பேச்சிப்பாறை அணைக்கு வருகிறது. இதனால் அணை வேகமாக நிரம்பி வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு 585 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர்மட்டம் 40.15 அடியாக இருந்தது. 2010ம் ஆண்டுக்கு பிறகு பேச்சிப்பாறை அணை 40 அடியை எட்டியுள்ளது. மழை நீடித்தால் அணை விரைவில் நிரம்பும் என தெரிகிறது. அணை நீர்மட்டம் உயர்ந்து வருவது விவசாயிகள் இடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## குமரியில் விவசாய பணிகள் தீவிரம்

நாகர்கோவில், : குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. நேற்றும் பல இடங்களில் மழை பெய்தது. நேற்று காலை நிலவரப்படி மாவட்டத்தில் அதிகபட்சமாக சிற்றார்-2 அணை பகுதியில் 77.6 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை 10, பெருஞ்சாணி 30.6, சிற்றார்-1ல் 10.2, பொய்கை 28.4, மாம்பழத்துறையாறு 43, ஆனைக்கிடங்கு 47, குருந்தன்கோடு 14.4, அடையாமடை 9, திருவட்டார் 23, முள்ளங்கி னாவிளை 17, புத்தன் அணை 31.2, திற்பரப்பு 20.2, பூதப்பாண்டி 21, சுருளோடு 27, கன்னிமார் 13.5, ஆரல்வாய்மொழி 28.4, பாலமோர் 7.9

மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 40.15, பெருஞ்சாணி 68.95, சிற்றார்-1 16.73, சிற்றார்-2 16.83, பொய்கை 8.50, மாம்பழத்துறையாறு அணையில் 54.12 அடி நீர்மட்டம் காணப்படுகிறது. இது தொடர்பாக பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு செயற்பொறியாளர் சுப்பிரமணி கூறுகையில், பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 41 அடியை நெருங்கி வருகிறது. 42 அடியை எட்டினால் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும். பெருஞ்சாணி அணையும் 71 அடியை நெருங்கினால் வெள்ள எச்சரிக்கை விடப்பட்டும். தற்போது அனைத்து சானல்களுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் விவசாய பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது. நாற்று நடவு பணிகளில் விவசாயிகள் தீவிரம் காட்ட தொடங்கியுள்ளனர் என்றார்.

## <u>பெத்தனபள்ளியில் வாங்கிலி கோழித்தீவன தயாரிப்பு ஆலை திறப்பு</u>

நாமக்கல், : நாமக்கல் நகரில் கோழிப்பண்ணை தொழில், கோழித்தீவன தயாரிப்பு, முட்டை, பிரா ய்லர் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி, சிக்கன் விற்பனை போன்ற கோழிப்பண்ணை சார்ந்த தொழில்களில் வாங்கிலி குரூப் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் சார்பு நிறுவனமாக கிருஷ்ணகிரி மாவட்டம் பி.கே.பெத்தனப்பள்ளியில் நவீன தொழில்நுட்பத் துடன் தரமான கோழித்தீவனம் தயாரிக்கும் வாங்கிலி கோழித் தீவன ஆலை அமைக்கப் பட்டு, திறப்பு விழா நடந்தது. இதில் வாங்கிலி குரூப் நிறுவனங் களின் தலைவர் சுப்பிரமணியம் வரவேற்றார். தேசிய முட்டை ஒருங் கிணைப்பு குழு வின் நாமக்கல் மண்டல தலை வர் டாக்டர். செல்வ ராஜ் குத்து விளக்கு ஏற்றினார். டென் மார்க் ஆண்ட்ரிஸ் தீவன ஆலை நிறுவன ஆசிய பசி பிக் இயக்குனர் ரிச்சர்ட்க்கி தீவன தானிய கிடங்கை திறந்து வைத்தார். வெங்கடேஸ்வரா ஹேச் சரீஸ் நிறுவன பொதுமேலாளர் மக்தும்

தீவன ஆலையை திறந்துவைத்தார். தமிழ்நாடு கோழிப்பண்ணை யாளர் சங்க தலைவர் நல்லதம்பி புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார். அகில இந்திய முட் டை ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் சிங்கராஜ் முழு சோயா ஆலையை திறந்துவைத் தார். தமிழ்நாடு முட்டைக் கோழி பண்ணை யாளர்கள் சம்மேளன தலைவர் முத்து சாமி ஆய்வுக்கூடத்தை திறந்துவைத்தார். இதில், நாமக்கல் முட்டை விற்பனையாளர் கள் சங்க தலைவர் ஆன ந்தன், நாமக்கல் மண்டல முட்டை உற்பத்தியா ளர் சொசைட்டி தலைவர் சின் ராஜ், சன் இந்தியா ஹே ச்சரீஸ் ரங்கநாதன், ஆண் ட்ரிஸ் நிறுவன அதி காரி அங்கமுத்து, கோழித்தீவன மூலப்பொருட்கள் விற்பனையாளர் சங்க தலைவர் முருகேசன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இந்த ஆலை யில் தரமான கோழித்தீவனம் தயாரிப்பதற்காக தென்கிழக்கு ஆசியாவிலேயே முதன் முறை யாக ஜெர்மன் மற்றும் டென் மார்க் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எக்ஸ்பாண்டர் இயந்திரம் உள்ளிட்ட பல்வேறு நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஆலையில் தரமான கோழித்தீவனம் தயாரிக்கப்படுகிறது. கோழித்தீவனத்தை 130 டிகிரி வரை வெப்பத்தில் தயாரிப்பதால் பாக்டீரியாக் கள் முழுவதுமாக நீக்கப்படுகிறது என அந்த நிறு வன த்தினர் தெரிவித்தனர். விழா முடிவில் வாங்கிலி பீட்ஸ் நிறுவனத்தின் மண்டல மேலாளர் செல்ல துரை நன்றி கூறினார். ஏற்பாடுகளை வாங்கிலி பீட்ஸ் நிறுவனங்களின் தலை வரும், தமிழ் நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சங்கத்துணைத்தலைவர் சுப்பிரமணியம், செல்வி, நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குனர்கள் மணிகண்டன், டாக்டர் மணிவண் ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## பெரம்பலூர் செட்டிகுளத்தில் ஞாயிற்றுக்கிழமையில் வெங்காய ஏலம்

பெரம்பலூர்,: விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று செட்டிகுளம் வெங் காய வணிக வளாகத்தில் இனி சனிக்கிழமைக்கு பதிலாக ஞாயிற்றுக்கிழமைகளில் ஏலம் நடைபெறும் என்று கலெக்டர் தரேஸ் அகமது தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது; செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் கடந்த செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் ரூ.3,21,142 க்கு சின்ன வெங்காயம் விற் பனை நடைபெற்றது. இதில் சிறுவாச்சூர், மாவ லிங்கை, சிறுவயலூர் சத்திரமனை, பொம்மனப்பாடி, செட்டிகுளம், நாட்டார்மங்கலம், மருதடி, நாரணமங்கலம், அனுக்கூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 49 விவசாயிகள் சின்ன வெங்காயத்தை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டு வந்தனர்.இந்த ஏலத்தில் திண்டுக்கல், சின்னசேலம், செட்டிகுளம், மங்கூன், சத்திரமனை, பொம்மனப் பாடி, பாடாலூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண் டனர். 28ம் தேதி நடை பெற்ற ஏலத்தில் புதிய வெங்காயம் கிலோ ரூ.39.50 க்கும், பழைய பட்டறை வெங் காயம் ரூ.7.00க்கும் சராசரியாக கிலோ ரூ.10. 50க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1,71,797க்கு விற்பனை நடைபெற்றது. 30ம் தேதி ஏலத்தில் புதிய வெங்காயம் கிலோ ரூ.28.00க்கும், பழைய பட் டறை வெங்காயம் ரூ.16.00 க்கும் ஏலம் போனது. சராசரியாக கிலோ ரூ.14.00க்கும் விற்பனையானது. மொத் தம் ரூ.1,49,345க்கு விற்பனை நடைபெற்றது. இவ்வணிக வளாகத்தில் இதுவரை செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் திறந்த முறை ஏலம் நடத்தப்பட்டு வந்தது. கலெக்டர் ஆய்வின்போதும் 23ம் தேதி நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத் தில் விவசாயிகள் தெரிவித்த கோரிக்கையின் அடிப்படையில்

இந்த வாரம் முதல் சனிக்கிழமைக்கு பதிலாக ஞாயிற்றுக்கிழமை ஏலம் நடத்தப்பட உள்ளது. இனிவரும் காலங்களில் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏலம் நடைபெறும். எனவே விவசாயிகள் ஞாயிற்றுக்கிழமை நடை பெறும் ஏலத்தில் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் பல் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பெரம்பலூர் மாவட்டத்திற்கு வந்து புதிய, தரமான சின்ன வெங்காயத்தை வாங்கி பயனடையலாம்.இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5 ஆண்டுகளுக்கு பின் கடம்பன்குளத்திற்கு தண்ணீர் திறப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

பாவூர்சத்திரம், : கடந்த 5 ஆண்டுகளாக நீர்வரத்து இன்றி காய்ந்து கிடந்த கடம்பன்குளத்திற்கு தினகரன் செய்தி எதிரொலி யால் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆலங்குளம் தாலுகா கீழப்பாவூர் யூனியனுக்குட்பட்ட சாலைப்புதூர் அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்கு நீர் ஆதாரமாக கடம்பன்குளம் உள்ளது. இந்த குளத்திற்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக தண்ணீர் வரத்தில்லாமல் காய்ந்து கிடந்தது. குளத்திற்கு தண் ணீர் வரும் கால்வாய்கள் போதிய பாரமரிப்பின்றி இருந்தது. இதுகுறித்து கடந்த 26ம் தேதி தினகரனில் படங்களுடன் விரி வாக செய்தி பிரசுரமானது. அதனைத்தொடர்ந்து பொதுபணித் துறை அதிகாரி கள் மேற் கொண்ட நடவடிக்கையால் 5 ஆண்டுகளுக்கு பின் னர் தற்போது தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மேலும் இதனையொட்டியுள்ள நாகல்குளம் நிரம்பி மறுகால் பாய்வதால் கடம்பன்குளத்திற்கு தண்ணீர் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 5 ஆண்டுகளுக்கு பின் கடம்பன்குளத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்ட போது நீர்பாசன தலைவர் திரவியம், செயலாளர் முத்து ராஜ்,

மற்றும் மணிவண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டு மலர் கள் தூவி வரவேற்றனர். இதனால் இப்பகுதியில் விவசாயமும் சிறப் பாக அமையும் எனவும், நிலத்தடி நீர்மட்டம் உயரவாய்ப்பு உள்ளதால் கிணற்று பாசன விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடம்பன்குளம் பாசனம் மூலம் விவசாயம் பெரும் விவசாயிகள் குளத்திற்கு செல்லும் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றினர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆவின் பால் விலை உயர்வு இன்று அமலுக்கு வந்தது**




சென்னை, தமிழக அரசு சார்ந்த நிறுவனமான ‘ஆவின்’ மூலம் வினியோகிக்கப்படும் பால் விலை நவம்பர் 1–ந்தேதி முதல் லிட்டருக்கு ரூ.10 அதிகரிக்கப்படும் என்று தமிழக அரசு கடந்த வாரம் அறிவித்தது. இந்த விலை உயர்வுக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துவிட்டன. பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்திவிட்டு, விற்பனை விலையை மட்டும் லிட்டருக்கு ரூ.10 உயர்த்துவதா? என்று கேள்வி எழுப்பப்பட்டது. பால் விலை உயர்வை கண்டித்து தி.மு.க. திங்கட்கிழமை போராட்டம் நடத்த இருக்கிறது. பிரதான எதிர்க்கட்சியான தே.மு.தி.க., பாரதீய ஜனதா, கம்யூனிஸ்டு கட்சிகள் போன்றவை பால் விலை உயர்வை கண்டித்து போராட்டங்கள்

நடத்தியுள்ளன. ஆனால் அரசு அறிவித்தபடி பால் விலை உயர்வு இன்று அமலுக்கு வந்தது. பால் விலை உயர்வால் ஓட்டல்கள், டீக்கடைகளில் டீ, காபி விலையும் உயரும் என்று கருதப்படுகிறது. பால் மூலம் தயாரிக்கப்படும் இனிப்பு வகைகளும் விலை உயரக்கூடும்.

## வனப்பகுதியில் பெய்த பலத்த மழையால் 7 ஆண்டுகளுக்கு பிறகு சஞ்சீவிராயன் குளம் நிரம்பியது விவசாயிகள் மகிழ்ச்சி



கோபி அருகே வனப்பகுதியில் பெய்த பலத்த மழையால் 7 ஆண்டுகளுக்கு பிறகு சஞ்சீவிராயன் குளம் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

சஞ்சீவிராயன் குளம் கோபிசெட்டிபாளையம் அருகே பெருமுகை ஊராட்சியில் சஞ்சீவிராயன் குளம் உள்ளது. சுமார் 80 ஏக்கர் பரப்பளவு கொண்ட மிக பெரிய குளம். 50 ஆண்டுகளுக்கு முன்பு குளத்தில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த பாசன பகுதியில் வாழை, கரும்பு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. சஞ்சீவிராயன் குளத்திற்கு தண்ணீர் வரத்து குறைந்ததால் கடைமடை விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டனர். அதைத்தொடர்ந்து ஒட்டு மொத்த பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கப்படாமல் மதகுகள் அடைக்கப்பட்டது. குளத்தில் தேங்கும் தண்ணீர் முழுவதுமாக, அந்த பகுதி கிணறுகளின் நிலத்தடி நீர்மட்டம் மேம்படுத்துவதற்கு பயன்பட்டு வருகிறது. பெருமுகை ஊராட்சி பகுதியில் விவசாயிகள் கிணற்று பாசனம் மற்றும் ஆழ்துளை கிணற்று பாசனத்தை பயன்படுத்தி வருகிறார்கள். தொட்டக்கோம்பை, கரும்பாறை, கல்யாணிப்பாறை உள்ளிட்ட வனப்பகுதியில் மழை பெய்யும்போது குளத்திற்கு தண்ணீர் வருகிறது.

பருவமழை பெய்யும்போது குளத்திற்கு தண்ணீர் வந்து சேரும். கடந்த சில வாரங்களுக்கு முன்பு குளம் தண்ணீரின்றி வறண்டு காணப்பட்டது. நிரம்பியது. இந்த நிலையில் வனப்பகுதியில் பெய்த பலத்த மழையால் குளத்திற்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. அதைத்தொடர்ந்து குளத்தின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. கடந்த 7 ஆண்டுகளுக்கு பிறகு சஞ்சீவிராயன் குளம் நிரம்பியது. வனப்பகுதியில் இருந்து தண்ணீர் வரத்து உள்ளதால் குளத்தில் இருந்து தொடர்ந்து தண்ணீர் வெளியேறிக்கொண்டு இருக்கிறது. சஞ்சீவிராயன் குளம் பரந்து விரிந்து கடல்போல் காட்சி அளிக்கிறது. குளம் நிரம்பி தண்ணீர் வெளியேறும் காட்சியை அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஆர்வத்துடன் நேரில் பார்வையிட்டு சென்றனர். இந்த குளத்தின் தண்ணீர் மூலம் பெருமுகை, பெருமுகைபுதூர், சைபன்நகர், எரங்காட்டூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் உள்ள சுமார் 500 ஏக்கர் விவசாய நிலங்கள் மறைமுக பாசன வசதி பெறுகிறது. பாலம் வேண்டும். இதுகுறித்து பெருமுகையை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது:- 7 ஆண்டுகளுக்கு பிறகு சஞ்சீவிராயன் குளம் நிறைந்தது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இதன்மூலம் ஒரு ஆண்டுக்கு மேல் தண்ணீர் பற்றாக்குறை இருக்காது. இந்த குளத்தில் தண்ணீர் இல்லாதபோது தூர்வாரி இருந்தால் கூடுதலாக தண்ணீரை சேமித்து இருக்கலாம். சஞ்சீவிராயன் குளத்தையொட்டி 30-க்கும் மேற்பட்ட வீடுகள், சுமார் 50 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. அந்த பகுதிக்கு செல்ல வேண்டும் என்றால் குளத்திற்கு தண்ணீர் வரும் பாதையை கடந்து செல்ல வேண்டும். அங்கு உள்ள தரைப்பாலத்தில் 4 அடிக்கு மேல் தண்ணீர் செல்கிறது. இதனால் எங்களால் எளிதாக அங்கு சென்றுவர முடியவில்லை. அந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வாகனங்களை குளத்திற்கு முன்பு உள்ள உறவினர்கள், தெரிந்தவர்கள் வீடுகளில் விட்டுவிட்டு வீடுகளுக்கு நடந்து

செல்கிறார்கள். எனவே தரைப்பாலம் உள்ள இடத்தில் உயர்மட்ட பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்‘ என்றார்.